முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13 திகதி முதல்

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20 திகதி வரை

(30.10.2022 ஞாயிறு முதல் 06.11.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானவான்களை படைத்து நன்கு
ஞானஆட்சி உருவாக்க வந்த
ஞானதேசிகனே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன்அவதாரம் போற்றி
2. போற்றியே அகத்திய மகரிஷியும்
புகலுவேன் இந்தியா தமிழகத்தில்
ஆற்றல்பட சுபகிருது துலை திங்களில்
அறிவிக்க முன்னான்கோர் திகதிமேல் இருபான் திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
வருங்கால பலன்குறித்த ஆசியுரைப்பேன்
திரையாக தமிழகம் இந்தியாவில்
துறைவாரி அதிகார வர்க்கங்கள்
4. வர்க்கங்கள் சேவையை மறந்து
வருவாய் லாப நோக்கமதில்
வர்க்கங்கள் கையூட்டு லஞ்சம்வழி
வருவாய் கண்டு சேவை மறந்து வாழ
5. வாழுகின்ற இந்தநிலை தொடர்ந்தால்
வர்க்கங்கள் அனைவருக்கும் வினை
காலனாக மாறியே இன்னல்
கண்டமல்லல் பொருளிழப்பு களவு என
6. எனவும் பிணி கண்டமென
இன்னல் மிகுதி கண்டுமே
ஞானம் கிட்டா அழிய நேரும்
ஞானிகள் கோபம் சாபம் அடைந்து
7. அடைந்து அவரவர் துறைவழி
அந்திமம் அடையும் உதவி
தடைகண்டு சோடைபெற நேரும்
தகாத இந்தநிலை காணா மீள
8. மீண்டு சர்வ பாதுகாப்பும்
மேலான வளர்ச்சியும் மாற்றமும்
தொண்டுவழி கண்டு அமைதியும்
தெய்வ பலமும்அடைய நேருமைபட

**9.** நேருமைபட உலகை தேற்றிட
நீதிமான் ஞானியாக வந்தகுரு
குருவரங்கன் சித்தி நெறியை
குறைவிலா தரும நெறியை

**10.** நெறியை கலியுக மக்களெல்லாம்
நிலமதனில் ஏற்றுத் தொடர
அறிவிப்பேன் இந்தியா தமிழக ஆளுமை
ஆற்றல்மிக்க ஞானஆட்சியாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் **13**ம் நாள் **30.10.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் **20**ம் நாள் **06.11.2022** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

இவ்வுலகினில் உள்ள மக்களுக்கு ஞானம் அளித்து அவர்களை ஞானவான்களாக ஆக்கி ஞானவான்கள் மூலம் ஞானிகள் துணைபட உலகமெலாம் ஞான ஆட்சியை உருவாக்கிடவே முருகப்பெருமானின் அம்சமாக அவதரித்திட்ட ஞானதேசிகனே, ஆறுமுக அரங்கமகா தேசிகனே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் **13**ம் நாள் **30.10.2022** ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் **20**ம் நாள் **06.11.2022** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா, தமிழகத்தில் திரைமறைவாக பல துறைகளில் அதிகார வர்க்கங்கள் தாங்கள் மக்களுக்கு சேவை செய்யவே வந்ததை மறந்து வருவாய் ஈட்டும் நோக்கிலும் லாப நோக்கிலும் செயல்பட்டு லஞ்ச லாவண்யங்களில் ஈடுபட்டு பொருள் சேர்த்து சேவை மறந்து வாழ்கின்றனர்.

இப்படிப்பட்ட நிலை மேலும் மேலும் தொடர்ந்து நடந்தால் அவர்கள் செய்கின்ற பாவங்கள் அதிகமாகி அவர்களது செயல்களே அவர்களை பாதித்து துன்பங்கள் உண்டாவதோடு ஈட்டிய பொருளையும் இழக்கும் நிலையும் உண்டாவதோடு நோய் துன்பங்களாலும் பாதிக்கப்பட்டு பெரும் துன்பத்திற்கு ஆளாக நேரிடுமப்பா. அதுமட்டுமல்லாது தர்மமே வடிவான ஞானிகளின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாக நேரிடுமப்பா.

ஞானிகளின் சாபத்தினாலும் கர்ம வினைகளாலும் அவர்கள் வகிக்கும் பதவிகளையும் இழப்பார்கள் பலவிதமான தடைகளையும் கண்டு பிறர் உதவிகளையும் இழந்து குற்றவாளிகளாகவும் ஆகிடுவார்கள்.

மோசமான இந்தவித நிலைமைகள் வாராமல் இருக்கவும் அதிலிருந்து மீளவும், மீண்டு பாதுகாப்பையும் பெற்று மேன்மேலும் வளர்ச்சியும் நல்ல மாற்றங்களையும் காண வேண்டுமாயின் தர்மநெறியாம் உண்மை ஞானநெறியாம் அரங்க மகான் கூறும் சன்மார்க்க நெறி நின்று மக்களுக்கு சேவை செய்திட வேண்டுமப்பா.

தொண்டின் மூலம் பிற உயிர்களுக்கு செய்கின்ற உபகாரத்தின் மூலமாகவே எளிமையாக தெய்வபலத்தை அடைந்து நேர்மையுடன் உலகை நடத்திட செய்து இந்த உலகை காத்திடவே நீதிமானாக ஞானவானாக அவதரித்திட்ட அரங்க மகானின் முழுமை ஞானம் அடையும் நெறியை சற்றும் குறையற்ற தரும நெறியை கலியுக மக்கள் எல்லாம் முழுமனதாய் ஏற்றுக் கொண்டு

வாழ்வினில் கடைப்பிடித்து வரவர இந்தியா தமிழக ஆட்சிகள் ஆற்றல் மிக்க ஞானிகள் துணை பெற்ற ஞான ஆட்சியாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–